# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் - 08 | தமிழ்மொழி | 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

➢ **இவ்வினாத்தாளுக்குரிய விடைகளை விடைத்தாளில் எழுதுக.**

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01) வாய்மை காக்கின்ற பரதன், 'நினைத்து இருந்து நெடுந்துயரம் மூழ்கிலேன்' என்கிறான். இங்கு 'வாய்மை' என்பதன் ஒத்தகருத்துச்சொல்
(1) இழிவரல் (2) மருட்கை (3) உண்மை (4) பொய்

02) 'அறிவினைத் தேடுவதில் கொண்டளவு வேட்கையினை அவ்வறிவினை ஏனையவர்களோடு பகிர்ந்துகொள்வதிலும் ஆர்வம் கொண்டவர் உவைஸ்' இங்கு வேட்கை என்பதன் ஒத்தகருத்தச் சொல்
(1) ஆவல் (2) ஆனந்தம் (3) அன்பு (4) வேடம்

03) 'பசியால் வாட்டமடைந்த மக்களின் பசிப்பிணியைத் தீர்த்தாள் மணிமேகலை' இங்கு வாட்டம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) மலர்ச்சி (2) நாட்டம் (3) வளர்ச்சி (4) வருத்தம்

04) இராபர்ட்ஸ் புரூஸ் ஆறுமுறையும் தோல்வி கண்டார். இங்கு தோல்வி என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
(1) வீரம் (2) வெற்றி (3) இழப்பு (4) முயற்சி

05) கிளியின் இளையது பிள்ளை என்பது போல, பருந்தின் இளையது
(1) குஞ்சு (2) குட்டி (3) பார்ப்பு (4) மகவு

06) எதிர்காலம் காட்டும் இடைநிலைகளானவை.
(1) கின்று, கிறு (2) த், ட் (3) ப், வ் (4) இன், ந்

07) நன்றாகப் பாடிய சிறுமி பரிசைப் பெற்றாள். இங்கு பெயரெச்சமாக வருவது
(1) சிறுமி (2) பரிசு (3) பாடிய சிறுமி (4) பாடிய

08) வாழ்க நிரந்தரம். வாழ்க தமிழ்மொழி. இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வினை
(1) தெரிநிலை வினை (2) வியங்கோள்வினை
(3) குறிப்புவினை (4) செய்வினை

09) ஏடு, பனுவல், புத்தகம், பொத்தகம் முதலான சொற்கள் குறிப்பன
(1) இயற்சொல் (2) திரிசொல் (3) திசைச்சொல் (4) வடசொல்

10) 'உயரமான மனிதர்' விரைந்து வருகிறார். இதில் உயரமான மனிதர் என்பது.
(1) வினைத்தொடர் (2) உரித்தொடர் (3) இடைத்தொடர் (4) பெயர்த்தொடர்

11) அமைதியான மனிதர்கள் இளமையாக வாழ்கிறார்கள். இதில் வந்த வினை அடை
(1) அமைதியான (2) இளமையாக
(3) மனிதர்கள் (4) வாழ்கிறார்கள்

12) பின்வருவனவற்றுள் போர்த்துக்கேய மொழிச்சொல்
(1) அலுமாரி (2) கந்தோர் (3) குசினி (4) தகவல்



kalvi.lk

13) Micro phone எனும் கலைச்சொல் குறிப்பது
(1) நுணுக்குக்காட்டி (2) தொலைநோக்கி
(3) ஒலிவாங்கி (4) திசையறிகருவி

14) அதிபர் மாணவருக்குப் பரிசில் வழங்கினார். இதில் இடம்பெற்ற வேற்றுமைப் பொருள்
(1) நட்பு (2) தகுதி (3) உறவு (4) கொடை

15) உயிர்மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
(1) 30 (2) 247 (3) 217 (4) 216

16) நாற்காலி, வளையல், முள்ளி முதலான சொற்கள்
(1) காரண இடுகுறிப்பெயர் (2) காரணப்பெயர்
(3) இடுகுறிப்பெயர் (4) காரணச் சிறப்புப் பெயர்

17) விடுதலை பெற்ற சமூகத்தில் ஆண்டான் ………………….. என்ற வேறுபாடுகள் காணப்படுவதில்லை
(1) ஆண்டாள் (2) அடிமை (3) அரசன் (4) அரசி

18) எச்சமாகவும் வினைமுற்றாகவும் வரும் சொல்
(1) வந்தான் (2) ஓடிய (3) பறந்த (4) கரையும்

19) குரங்கு, கவிஞன், பாட்டு, ஆசு, சித்திரம் எனும் பலபொருள் குறித்த ஒரு சொல்
(1) கவி (2) பதி (3) ஓவியம் (4) செய்யுள்

20) மாணவர்கள் அதிக கவனமெடுத்துப் படித்தார்கள் ………………… சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்கள்.
(1) ஆனால் (2) எனவே (3) ஆகவே (4) எனினும்

**(20x1 ½ = 30 புள்ளிகள்)**

## பகுதி - II

➢ 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வினாக்களுக்கும் 5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களுள் ஏதாவது ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01) பாடசாலையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
(1) நீர் மேற்கொண்ட கணிப்பீடுகள் 3 தருக.
(2) அக்கணிப்பீடுகளில் ஒன்றைக் குறிப்பிட்டு, அதற்காக நீர் மேற்கொண்ட முன்னாயத்தங்கள் 3 தருக.
(3) அக்கணிப்பீட்டிற்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மூன்று தருக.
(4) இக்கணிப்பீட்டினால் நீர் பெற்ற பயன்கள் 3 தருக.

**(4x3=12 புள்ளிகள்)**

02) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து, 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.
(1) உணவுப் பழக்க வழக்கம்
(2) வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்.
(3) இயற்கைக் காட்சி
**(4)** நான் ஒரு ஆசிரியரானால் **(18 புள்ளிகள்)**

Education கல்வி



kalvi.lk

03) சுகவீனமுற்றிருக்கும் உங்கள் உறவினர் ஒருவருக்கு ஆறுதல் கூறியும், அவர் நலமுற வேண்டிப் பிரார்த்தித்தும் 75 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக.

(12 புள்ளிகள்)

04) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(1) இரட்டைக் காப்பியங்கள் எவை?

(2) புறாவுக்காக இரங்கி தன்னையே கொடுத்த சோழமன்னன் யார்?

(3) உலகில் உயிர்களின் தோற்றத்திற்கான அடிப்படை எது எனக் கூறப்பட்டுள்ளது?

(4) அழைப்பிதழில் இடம்பெற வேண்டிய விடயங்கள் 3 தருக.

(5) நாடகத்தை 'பாமர மக்களின் பல்கலைக் கழகம்' எனக் கூறியவர் யார்?

(6) வியங்கோள்வினை எவ்வெவ் பொருள்களில் வரும்?

(18 புள்ளிகள்)

05) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

ஓவியம் தருவாய்! சிற்பம்
உணர்விப்பாய்! கதையூட்டக்
காவியம் தருவாய்! மக்கள்
கலகலவெனச் சிரிப்பு
மேவிடும் விகடம் சொல்வாய்
மின்னிடும் காதல் தந்து
கூவாய்! வீரம் பேச்சு
கொட்டுவாய் கோலந்தாளே!

(1) பத்திரிகை எவ்வெவற்றைத் தருவதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்?

(2) இப்பாடலில் வந்துள்ள இரட்டைக் கிளவியினைத் தருக.

(3) இங்கு கோலத்தாள் என்று குறிப்பிடப்படுவது யாது?

(4) ஒத்தகருத்துச்சொல் தருக.

1. சிரிப்பு 2. ஓவியம் (10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

06) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சூரியன் என்ற ஒன்று இல்லாவிடில் இந்த நில உலகம் இல்லை என்று கூறலாம். சூரியன் என்பது சுய ஒளியுடைய ஒன்றாகும். சூரியனுக்கு ஆதவன், கதிரவன், பகலவன், ஞாயிறு எனப் பல பெயர்கள் உண்டு. சூரியன் என்பது வடமொழிச் சொல்லாகக் கூறப்படுகின்றது. இருப்பினும் ஆதிகாலம் முதல் புழங்கிய சொல்லாக இருக்கலாம். ஏனெனில், நெல் வயலில் நெல் விளைந்தபோது ஒருசில பகுதி விளையாமல் நின்றுவிட்டால் சூறைக்கட்டை என்பர் வேளான்பெருமக்கள். சூறை என்பது வெப்பத்தால் விளையாமல் போனது. வெப்பக்காற்று வீசும்போது சூறைக்காற்று என்றே பழங்காலத்தில் அழைத்தனர்.

(1) சூரியன் என்பதன் பொருள் யாது?

(2) சூரியனை வேறு எவ்வாறு அழைப்பார்கள் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்?

(3) சூறைக்கட்டை என்பதன் பொருள் யாது?

(4) ஒத்தகருத்துச் சொல் தருக.

1. உலகம் 2. காற்று (10 புள்ளிகள்)

07) அ) பின்வரும் சொற்களை வைத்துக் கருத்துள்ள வாக்கியம் அமைக்குக.

1. கலை 2. களை 3. கழை (6 புள்ளிகள்)

ஆ) பின்வரும் பந்தியிலுள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.

எணது துரைசார் அரிவு குறித்த என் உணர்வு விளித்துக்கொண்டு எண்ணை எங்கெள்ளாமோ இலுத்துச் சென்று அளைக்களிக்கிறது. (4 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457